ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2433/ 31 - 2025 අප්‍රේල් මස 25 වැනි සිකුරාදා - 2025.04.25

2433/31 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டம்**

92 ஆவது பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரான அநுர கருணாதிலக ஆகிய நான், குறித்த சபைக்கு வேலைப் பொறுப்பதிகாரி (பயாகல) அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை காணப்படுவதனால் இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.

**அநுர கருணாதிலக,**
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும்
வீடமைப்பு அமைச்சு,
12 ஆவது மாடி,
செத்சிறிபாய, கட்டம் II,
பத்தரமுல்லை.
2025, ஏப்பிறல் 10.

## அட்டவணை

களுத்துறை மாவட்டத்தில் களுத்துறை பிரதேச செயலகப் பிரிவில் இல. 732, ஏதகம கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் பரகஹவத்த கிராமத்தில் அமைந்துள்ள திட்ட உருவரைவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியில் 33.35 பேர்ச்சுகள் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி ;

வடக்கு: திரு. ஆரியதாச மற்றும் எதல் பெரேரா, பியட்டிரஸ்ட் பெரேரா ஆகியோர் உரிமை கோரும் காணி மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் நீர்த்தாங்கி கோபுரம் அமைந்துள்ள காணி; கிழக்கு : மீகஹவத்த; தெற்கு : துண்டு இல. 3பீ மற்றும் 3சீ (திட்ட இலக்கம் 4556) ; மேற்கு : நீர்த்தாங்கி கோபுரம் (தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை) அமைந்துள்ள காணி மற்றும் காலி வீதி.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : சீ. மேரி ஆன் பெரேரா,
இல. 22/15, விவேகாராம வீதி,
வாத்துவ.

EOG 04-0174

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.